# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1946/37 - 2015 දෙසැම්බර් මස 23 වැනි බදාදා - 2015.12.23

*1946/37 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 45 ஆவது பிரிவின் (2) ஆவது பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களினால் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்கு அளிக்கப்படும் தொழிற்பாடுகள் தொடர்பான அமைச்சரவை தீர்மானத்திற்கமைய மேற்கொள்ளப்படும் அறிவித்தல்**

“இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்கு அளிக்கப்படும் தொழிற்பாடுகள்” தொடர்பான 2015.10.07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் 2015.10.21 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 45 ஆவது பிரிவின் 17 ஆம் பந்தியின் பிரகாரம் நியமிக்கப்பட்ட கிராமிய பொருளாதார விவகார அமைச்சின் பிரதியமைச்சருக்கு, அரசியலமைப்பின் 45 ஆவது பிரிவின் (2) ஆம் பந்தியின் பிரகாரம் அளிக்கப்பட்ட தொழிற்பாடுகள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2015, நவெம்பர் 16 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படல் வேண்டும் என இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

பீ. ஹரிசன்,
கிராமிய பொருளாதார விவகார அமைச்சர்.

*கிராமிய பொருளாதார விவகார அமைச்சு,*
*2015, நவெம்பர் 16.*

**அட்டவணை**

**கடமைகளும் தொழிற்பாடுகளும்**

1. கால்நடை வள அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கைகள் மற்றும் உபாயத் திட்டங்களின் உருவாக்கம் மற்றும் அமுலாக்கலில் கௌரவ அமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
2. கிராமிய பொருளாதார அபிவிருத்தித் துறையில் தேசிய மற்றும் பிராந்திய கொள்கைகள்/உபாயத்திட்டங்களின் உருவாக்கம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் அமுலாக்கலில் கௌரவ அமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
3. நிதியமைச்சு, ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திறைசேரி ஆகியவற்றுடனான அமைச்சின் இணைப்பாக்க விடயங்களில் அமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
4. அமைச்சின் ஊடாக கிழக்கு மாகாணத்தில் அமுல்படுத்தப்படும் கால்நடைவள அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் மீளாய்வு செய்வதுடன் மேற்படி விடயங்களில் கௌரவ அமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
5. மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுல்படுத்தப்படவுள்ள கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டங்களை மேற்பார்வை செய்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.
6. பாராளுமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்படும் வினாக்களுக்கு பதிலளித்தலும், இவ்விடயம் தொடர்பாக கௌரவ அமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்கலும்.
7. கௌரவ அமைச்சர் விடுமுறையில் அல்லது நாட்டிற்கு வெளியே செல்கையில் பதிற்கடமையாற்றல்.
8. கௌரவ அமைச்சரால் ஒப்படைக்கும் ஏனைய பணிகள்.

*1- 445*